# தமிழர் கல்வி மேம்பாட்டுப் பேரவை

## TAMIL EDUCATION DEVELOPMENT COUNCIL

# அனைத்துலகத் தேர்வு

# 2018

# தமிழ்மொழி

## வளர் தமிழ் 5

சுட்டெண்:

நேரம்: 150 மணித்துளிகள்

மொத்தப்புள்ளிகள் : 100

## அலுவலகப் பயன்பாட்டுக்கு

| வினா எண் | புள்ளிகள் | 1ம் முறை | 2ம் முறை | இறுதிப் புள்ளிகள் |
|---|---|---|---|---|
| 1 | 30 | | | |
| 2 | 10 | | | |
| 3 | 10 | | | |
| 4 | 10 | | | |
| 5 | 10 | | | |
| 6 | 10 | | | |
| 7 | 05 | | | |
| 8 | 15 | | | |
| மொத்தப் புள்ளிகள் | 100 | | | |

| | |
|---|---|
| 1ம் முறை - பெயர் / ஒப்பம் | |
| 2ம் முறை - பெயர் / ஒப்பம் | |

1) **பொருத்தமான விடையைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

1. நல்ல பண்புள்ளவரின் நட்பு, பழகப் பழக ________________ தரும்.

   ( இனிமை, கவலை, தீமை )

2. காவலனைக் கண்ட கள்வன் ________________ என விழித்தான்.

   ( திருதிரு, மளமள, கடகட )

3. கடற்கரைச் சிற்றூரைச் செதுக்கி சிற்பக் காடாக்கிய மன்னன் ________________ .

   ( நெடுஞ்சேரலாதன், நரசிம்மபல்லவன், அதியர்மான் )

4. செங்குட்டுவனின் தம்பி ________________.

   ( மாடலன், இளங்கோ, கணிகன் )

5. வட்டம் + மேசை என்பதைச் சேர்த்து எழுதினால் ________________ .

   ( வட்டமேசை, வட்டம்மேசை, வட்டுமேசை )

6. பாலைநிலச் செடிகளில் ஒன்று ________________ .

   ( முதிரை, நாகதாளி, வேம்பு )

7. தை இரண்டாம் நாள் கொண்டாடப்படுவது ________________ .

   ( தைத்திருநாள், தைப்பொங்கல், மாட்டுப்பொங்கல் )

8. மாறன் வயிற்று ________________ துன்பப்பட்டான்.

( வலியால், வளியால், வழியால் )

9. வடக்கு, கிழக்கு, தெற்கு, மேற்கு என்பன ________________ .

( நானிலம், நாற்றிசை, நாற்படை )

10. மலையும் மலைசார்ந்த இடமும் ________________.

( குறிஞ்சி, முல்லை, மருதம் )

11. நாளை நாங்கள் கலைவிழாவில் நாடகம் ________________.

( நடித்தோம், நடிக்கின்றோம், நடிப்போம் )

12. ஆழமற்ற கடல் நீர் ஏரியைக் ________________ என அழைப்பர்.

( குளம், ஆறு, களப்பு )

13. அந்நாளில் நடம் என அழைக்கப்பட்ட கலை ________________.

( ஓவியம், சிற்பம், நடனம் )

14. வேணி நூலைப் ________________ முடித்தாள்.

( படித்து, பழகி, பற்றி )

15. 'மீன்பாடும் வாவி' என்று சிறப்பாக அழைக்கப்படுவது ________________ .

( மட்டுநகர், யாழ்நகர், மன்னார் )

16. புலிக் கொடி ________________ கொடியாகும்.

( சேரரது, சோழரது, பாண்டியரது )

17. ____________ விளையாட்டுப் போட்டியில் பரிசுகள் பெற்றேன்.

( நீ, நான், நாம் )

18. ஒளி என்பதன் எதிர்ச்சொல் ____________ .

( வெளிச்சம், பகல், இருள் )

19. காகத்தின் கூட்டில் முட்டையிடும் பறவை ____________ .

( மயில், குயில், புறா )

20. புலி காட்டில் வாழ்ந்தது. புலிகள் காட்டில் ____________ .

( வாழ்ந்தனர், வாழ்ந்தன, வாழ்கின்றன )

21. நிலவன் ____________ யானையைக் கண்டு அஞ்சினான்.

( கத்திய, பிளிறிய, உறுமிய )

22. ____________ ஒரு சிறந்த உடற்பயிற்சி.

( நடத்தல், பேசுதல், வாசித்தல் )

23. அக்காவால் மாலை ____________ .

( கட்டினாள், கட்டுகிறாள், கட்டப்பட்டது )

24. குறள் : சுற்றத்தாற் சுற்றப் படவொழுகல் செல்வந்தான்
பெற்றத்தாற் ____________ பயன்

( கற்ற, பெற்ற, விற்ற )

25. கலப்புச் சுவையுடையது ________________ .

( மிளகாய், தக்காளி, புளி )

26. கோவலனைப் பிரிந்து கண்ணகி________________வாழ்ந்தாள்.

( தன்னந்தனியே, கன்னங்கரிய, சின்னஞ்சிறிய )

27. **பழமொழி :** துறவிக்கு வேந்தன் ________________ .

( கரும்பு, துரும்பு, அரும்பு )

28. அம்மா கறிக்குப்________________கரைத்தார்.

( புலி, புளி, புழி )

29. நேற்றுப் பலமாக ________________ காற்றினால் மரங்கள் முறிந்தன.

( பொழிந்த, வீசிய, எறித்த )

30. கலிலியோ கண்டுபிடித்த கருவி________________ .

( தொலைவரி, தொலைநோக்கி, தொலைபேசி )

புள்ளிகள் 30

**2) அடைப்புக் குறிக்குள் உள்ள சொற்களைக் கீறிட்ட இடங்களில் பொருத்தமாக மாற்றி எழுதுக.**

1. நாங்கள் ஆசிரியருடன் __________________ சுற்றுலாச் சென்றோம். ( பேருந்து )

2. __________________ வனையப்பட்ட மண்பானைகள் அடுக்கி வைக்கப்பட்டிருந்தன. ( செழியன் )

3. அம்மா முற்றத்தில் நின்ற __________________ த் தீனி போட்டார். ( கோழி )

4. தமிழினி __________________ தமிழ்ப்பள்ளியிலிருந்து வீட்டிற்கு வந்தாள். ( தங்கை )

5. நாம் பிறர் செய்த __________________ மறக்கக் கூடாது. ( உதவி )

புள்ளிகள் 10

## 3) பாடநூல் வினாக்கள் ஏழினுள் ஐந்திற்கு மட்டும் விடை தருக.

1. பொதுமறை என்று அழைக்கப்படும் நூல் எது?

2. தமிழ்நாட்டில் பல்லவ மன்னர்களால் வரையப்பட்ட சிறந்த ஓவியங்கள் எங்கே காணப்படுகின்றன ?

3. சேரசோழபாண்டியர் எவ்வாறு அழைக்கப்பட்டனர்?

4. மீன்பிடித்தல், உப்பு விளைவித்தல் எந்த நிலத்துக்குரிய தொழில்கள் ?

5. புரட்சிக் கவிஞர் என அழைக்கப்பட்டவர் யார்?

6. பாலாவி ஆற்றங்கரையில் அமைந்துள்ள ஈச்சுரம் எது ?

7. காடுபடு செல்வங்கள் இரண்டின் பெயர்களைத் தருக.

புள்ளிகள் 10

4) **கீறிட்ட இடங்களில் பொருத்தமான சொற்களை வைத்து கவிதையை நிரப்புக.**

## பறவைகள்

| | | |
|---|---|---|
| கூவும் | குயிலே | பழக்கம் |
| ஆட்டம் | தமிழில் | |

ஆடிக்களிக்கும் மயிலே வா !

________________ எனக்குச் சொல்லித்தா !

பறந்து திரியும் காக்கா வா !

பகுத்துண்ணும் ________________ சொல்லித் தா !

________________ சேவல் இங்கே வா !

கூவி எழுந்திடச் சொல்லித் தா !

கிள்ளை மொழிபேசும் கிளியே வா !

பிள்ளைத் ________________ பேசச் சொல்லித் தா !

பாடித் திரியும் ________________ வா !

பாட்டுப் பாடச் சொல்லித் தா !

புள்ளிகள் 10

5) **மிகப் பொருத்தமான சொல்லைக் கீறிட்ட இடத்தில் எழுதுக.**

| | | |
|---|---|---|
| நீண்ட | வியந்தனர் | அனைவரையும் |
| புகழ்ந்து | ஔவைப்பாட்டி | |

ஔவையார் சிறந்த புலவர். குழந்தைகள் அவரை ________________ என்று அழைப்பர். ஒருநாள் ஔவையார் அரசவைக்குச் சென்றார். அவையில் அரசனும் புலவர்களும் வீற்றிருந்தனர்.அங்கிருந்த புலவர்கள் அரசனைப் பலவாறாகப் ________________ வாழ்த்தினர். இறுதியாக ஔவையார் அரசனை வாழ்த்துவதற்கு எழுந்தார். அப்போது அரசன் ஔவையாரிடம் இருந்து ________________ வாழ்த்துக் கிடைக்கும் என்று எண்ணினான். ஔவையும் அரசனைப் பார்த்து "வரப்புயர" என்ற பாடலைப் பாடி ________________ மகிழ்வித்தார். அரசனும் புலவர்களும் ஔவையாரின் பாடலைக் கேட்டு ________________ .

புள்ளிகள் 10

6) பந்தியை வாசித்து, வினாக்களுக்கு முழுவிடை தருக.

ஆசிரியர்கள் என்போர் எழுத்து அறிவிக்கும் இறைவனாகக் கருதப்படுவார்கள். அவர்கள் மாணவர்களின் அறிவுத் திறனை வளர்ப்பதையே தங்கள் முதன்மைக் கடமையாகக் கருதுவர். ஆசிரியர்கள் பழகுவதற்கு உண்மையாகவும் அன்பாகவும் இருப்பார்கள். அவர்களது உரையாடல்களும் செயல்களும் மாணவர்களை ஊக்குவிப்பதாக அமைந்திருக்கும். மாணவர்களின் வெற்றியைத் தமது வெற்றியாகக் கருதி மகிழ்வார்கள். வேறொருவரின் வெற்றிக்காக மகிழ்வோரில் ஆசிரியர்களே முதலிடத்தில் உள்ளனர்.

1. ஆசிரியர்கள் என்போர் எவ்வாறாகக் கருதப்படுவார்கள்?

______________________________

______________________________

2. மாணவர்களின் அறிவுத்திறனை வளர்ப்போர் யார்?

______________________________

3. ஆசிரியர்கள் பழகுவதற்கு எவ்வாறு இருப்பார்கள்?

______________________________

4. ஆசிரியர்களது உரையாடல்களும் செயல்களும் யாரை ஊக்குவிப்பதாக அமைந்திருக்கும்?

______________________________

______________________________

5. ஆசிரியர்கள் எதனைத் தமது வெற்றியாகக் கருதி மகிழ்வர்?

______________________________

புள்ளிகள் 10

## 7) பந்தியைத் தமிழ்மொழியில் மாற்றி எழுதுக.

*Kuyili went to the shop with her uncle. She saw beautiful dolls there.She asked her uncle to buy a doll. He bought a beautiful doll and gave it to her. She went home happily.*

*Kuily andò con lo zio al negozio, dove vide delle belle bambole. Kuily chiese allo zio di farsi comprare una bambola. Lo zio gliela comprò e Kuly ritornò felice a casa.*

*Kujili ging mit ihrem Onkel einkaufen. Dort sah sie schöne Puppen. Sie fragte ihren Onkel, ob er ihr eine Puppe kaufen würde. Er kaufte ihr eine schöne Puppe. Sie ging fröhlich nach Hause.*

*Kuyili tog til en butik med hendes farbror/onkel. Der så hun flotte dukker. Hun spurgte hendes farbror/onkel, om han vil købe en dukke til hende? Han købte en flot dukke til hende. Hun tog glad hjem.*

*Kuyili gikk til butikken med onkelen(lille bror til faren) sin. Der så hun pene dukker. Hun spurte onkelen om å kjøpe en dukke. Han kjøpte en pen dukke og gav den til henne. Hun gikk glad hjem.*

*Kujily ging met haar oom naar de winkel. Daar zag ze een mooi pop. Ze vroeg aan haar oom of ze die pop mocht hebben. Hij kocht de mooie pop voor haar. Ze was heel blij met haar pop.*

*Kuyili gick till affären med sin farbror (pappas lillebror). Där såg hon vackra dockor. Hon frågade sin farbror om han kunde köpa en docka till henne. Han köpte en fin docka och gav till henne. Hon gick hem med glädje.*

*Kuyili est allée au supermarché avec son oncle. Elle y a vu de très belles poupées. Elle demanda à son oncle de lui acheter une poupée. Il acheta alors une belle poupée et la lui donna. Elle rentra chez elle, heureuse.*

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

________________________________________

| புள்ளிகள் 05 |
|---|

**8) தரப்பட்டுள்ள தலைப்புகளில் ஒன்றைத் தெரிவு செய்து 60 சொற்களுக்குக் குறையாமல் கட்டுரை எழுதுக.**

- வளங்கொழிக்கும் மன்னார்.
- விலங்குகள்
- பழங்கள்
  - பழங்கள் பற்றி... ( பழங்களின் பெயர்கள் )
  - பழங்களைப் பெற்றுக் கொள்ளும் இடங்கள்
  - பழங்கள் உண்பதனால் ஏற்படும் நன்மைகள்
  - நீர் விரும்பும் பழம் எது? ஏன்?

புள்ளிகள் 15